பத்திரிக்கைச் செய்தி

குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தடையில்லா சான்று வழங்க ரூ.5,000/- லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் உதவி இயக்குநர் (புவியியல்) அவர்களுக்கு 3 ஆண்டுகள் சிறை மற்றும் ரூ.40,000/- அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திருமதி.ஜெபசெல்வி, திருநெல்வேலி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தான் புதிதாக குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தடையில்லா சான்றிதழ் வழங்க உதவி இயக்குநர் (புவியியல்), நிலத்தடி நீர் பிரிவு, பொதுப்பணித்துறை, திருநெல்வேலி மாவட்ட அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். தடையில்லா சான்றிதழ் பெறுவதற்கு பரிந்துரை செய்ய திரு.கருப்பையா, உதவி இயக்குநர் (புவியியல்), நிலத்தடி நீர் பிரிவு, பொதுப்பணித்துறை, திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 15.07.2014 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.கருப்பையா, உதவி இயக்குநர் (புவியியல்) லஞ்சபணம் ரூ.5,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் இன்று 30.03.2026ந் - தேதி ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்ற, நீதிபதி திருநெல்வேலி மாவட்டம் திரு.கருப்பையா, உதவி இயக்குநர் (புவியியல்) அவர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.40,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.